TNVR090006692021

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.

முன்னிலை ... திரு. R.V. ராஜகுமார், B.L.,

சார்பு நீதிபதி, விருதுநகர்.

2025-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 14-ஆம் நாள் வெள்ளிக்கிழமை

இ.ம.எண். 2/2023

இன்

இந்து திருமண முதலேற்பு மனு எண்.205/2021

XXXXXXX ... மனுதாரர்/மனுதாரர்

/எதிர்/

XXXXXXXXXX ... எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்

இந்த மனுவானது இந்நீதிமன்றத்தில் 02.06.2023 அன்று தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. J. மாரிக்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் வழக்கறிஞர் திரு. J. ரகுராமன் அவர்கள் ஆஜராகியிருந்த போதிலும், போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டும் எதிர்உரை தாக்கல் செய்யாததால் ஒருதரப்பாக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலைனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து அளிக்கும்

**உத்தரவு**

எதிர்மனுதாரர், மனுதாரருக்கும், அவரது குழந்தைக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.20,000/-த்தை இடைக்கால ஜீவனாம்சமாக செலுத்த உத்தரவிடக்கோரி இந்து திருமணச்சட்டம் பிரிவு 24-ன் கீழ் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **மனுவின் சுருக்கம் :-**

இந்த மனுவின் மனுதாரர் அசல் மனுவிலும் மனுதாரர். அசல் மனுவானது விவாகரத்து கோரி இந்த மனுவின் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் காதல் திருமணத்தை மனுதாரரின் பெற்றோர்கள் ஏதாவது பிரச்சினை செய்வார்கள் என்று அருப்புக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 16.03.2019-ல் திருமணம் நடைபெற்றதாக பொய்யாக கூறி பாதுகாப்பு கேட்டு புகார் கொடுத்துள்ளார். அப்புகாரில் மனுதாரரின் பெற்றோர்கள் ஆஜராகி எந்த பிரச்சினையும் இல்லை என்றதால் அதன் பிறகு 15 நாட்கள் கழித்து மனுதாரரின் பெற்றோர்கள் மேற்படி திருமணத்தை அனைவரின் முன்னிலையில் நடத்த வேண்டுமென்று விரும்பியும், யாரும் அவர்களது மகளை உதாசீனமாக பேசி விடக்கூடாது என்று எண்ணியும் கடந்த 17.04.2019-ஆம் தேதியன்று திருப்பரங்குன்றம் ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோவிலில் வைத்து இந்து சமய வழக்கப்படி மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் திருமணம் செய்து வைத்தார்கள். திருமணத்தின்போது மனுதாரருக்கு 10 பவுன் தங்க நகையும், கம்மல், மூக்குத்தி மற்றும் கால் கொலுசும், எதிர்மனுதாரருக்கு 2½ பவுன் என்று மொத்தம் 12½ பவுன் நகைகள் மற்றும் அனைத்து வீட்டு உபயோக பொருட்களும் சீதனமாக கொடுக்கப்பட்டது. மேற்படி நகைகள் அனைத்தும் தற்போது வரை எதிர்மனுதாரர் வசம் உள்ளது. மேற்படி திருமண

வாழ்க்கையில் ஸ்ரீஹரிஹரன் என்ற (10 மாதம்) மகன் உள்ளார்.

திருமணம் முடிந்தவுடன் மனுதாரர், எதிர்மனுதாரருடன் அவரது சொந்த ஊரான மலைப்பட்டிக்கு சென்று வாழ்ந்து வந்தார். மனுதாரரும், எதிர்மனுதாரரும் திருமணம் செய்து கொண்டது அவரது குடும்பத்தினருக்கு பிடிக்கவில்லை. திருமணம் முடிந்த 5-ஆவது நாள் எதிர்மனுதாரர் அதிகப்படியாக குடித்துவிட்டு வந்து மனுதாரரிடம் உன் அப்பன் போட்ட நகை போதாது என்றும், என் அம்மா, தங்கை எனக்கு பெண் பார்த்து வைத்தால் 20 பவுன் நகை போட்டிருப்பார்கள் என்று கூறி மீதி 8 பவுன் நகையை உன் அப்பனிடம் இருந்து வாங்கிட்டு வா என்று அடித்து உதைத்துள்ளார். எதிர்மனுதாரரின் குடும்பத்தினர் மீதி நகை வரவில்லை என்றால் எதிர்மனுதாரருக்கு வேறு திருமணம் செய்து வைத்து விடுவோம் என்று மிரட்டியே வந்துள்ளார்கள்.

எதிர்மனுதாரரின் தங்கைக்கு குழந்தை பிறந்து அதை பார்க்க அனைவரும் செல்லும்போது எதிர்மனுதாரரின் தாயார் பிறந்த குழந்தைக்கு ஏதாவது பெரியதாக சீதனம் செய்ய வேண்டுமென்று எதிர்மனுதாரரிடம் சொல்லியுள்ளார். உடனே எதிர்மனுதாரர், மனுதாரரிடம் 2 பவுன் தங்க செயின் வேண்டுமென்று அன்று இரவு அடித்து கொடுமை செய்துள்ளார். எதிர்மனுதாரர் அடித்ததில் மனுதாரருக்கு தலையில் காயம் ஏற்பட்டு அக்கம் பக்கத்தினர் மனுதாரரின் பெற்றோர்களுக்கு போன் செய்து இரவு 02.00 மணிக்கு வரவழைத்தார்கள். மனுதாரரின் பெற்றோர்கள் வந்ததும் அவர்களையும் கேவலமாக, அசிங்கமாக பேசி திட்டியுள்ளார். மறுநாள் காலை நடந்த விஷயத்தை மனுதாரர், எதிர்மனுதாரரின் தாயாரிடம் கூறியபோது, அவரும் நகை வேண்டுமென்று மனசாட்சி இல்லாமல் கூறி விட்டார். அடிபட்ட காயத்திற்கு விருதுநகர் அரசு மருத்துவமனையில்

சிகிச்சை பெற்று, மீண்டும் எதிர்மனுதாரரிடம் சென்றால் அவர் கொலை செய்து விடுவார் என்று பயந்த மனுதாரர் அவரது பெற்றோர் வீட்டில் உயிர் வாழலாம் என்று எண்ணி, பசு மார்க் கம்பெனிக்கு வேலைக்கு சென்றார். மேற்படி விஷயம் தெரிந்து கொண்ட எதிர்மனுதாரர், மனுதாரர் வேலை செய்யும் இடத்திற்கு சென்று அங்கிருக்கும் நபர்களுடன் தவறாக பேசியுள்ளார். அங்குள்ளவர்கள் சத்தமிட்டதால் சென்று விட்டார். வேலைக்கு சென்றதை பிடிக்காத எதிர்மனுதாரரும் அவரது குடும்பத்தினரும் அதை தடுக்க வேண்டும் என்பதற்காக அக்கம் பக்கத்தில் இருப்பவர்களிடம் அவதூறாகவும், தரக் குறைவாகவும் பேசி வந்துள்ளார்கள். அதன்பிறகு அவர்கள் மனுதாரரது பெற்றோர் வீட்டிற்கு வந்து, தகராறு செய்தபோது, எதிர்மனுதாரர் அருகில் இருந்த கல்லை எடுத்து கொலை வெறியுடன் வீசியுள்ளார். மேற்படி சம்பவம் தொடர்பாக மனுதாரர் 21.01.2020-ஆம் தேதியன்று விருதுநகர், அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

மேற்படி புகார் விசாரணையில் எதிர்மனுதாரர் ஆஜரானதில் அவரை சத்தமிட்டு அறிவுரை கூறினார்கள். அதற்கு எதிர்மனுதாரர் குடிப்பழக்கத்தை நிறுத்தி விட்டு வந்து 5 மாதத்திற்குள் மனுதாரரை கூட்டி செல்வதாக கூறியுள்ளார். அப்போது குடும்ப நலனை கருதி மேற்படி நடவடிக்கை தேவையில்லை என்றதால் மேற்படி புகார் மனு முடிக்கப்பட்டது. அதன்பிறகு 3 மாதம் கழித்து எதிர்மனுதாரர் திருந்தி விட்டேன் என்று கூறி மலைப்பட்டியை சேர்ந்த பிரபாகரன் என்பவரை அழைத்து வந்தார். அதனால் மனுதாரர், எதிர்மனுதாரருடன் சென்று நல்ல முறையில் வாழ்க்க வாழ எண்ணி சென்றார். அன்று இரவே அதிகப்படியாக குடித்துவிட்டு வந்து மனுதாரரை அடித்து உதைத்து செக்ஸ் டார்ச்சர் செய்துள்ளார்.

மனுதாரர் கருவுற்ற காரணத்தினால் வேலைக்கு செல்வதை நிறுத்தி விட்டார். கடந்த 25.12.2020-ஆம் தேதியன்று மனுதாரருக்கு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த ஒருசில நாட்கள் கழித்து எதிர்மனுதாரர் அதிகப்படியாக குடித்துவிட்டு வந்து மீண்டும் குடிப்பதற்கு மனுதாரர் போட்டிருந்த நகையை கேட்க மனுதாரர் கொடுக்காததால் அவரது முதுகில் எட்டி உதைத்துள்ளார். நகையை தந்தபிறகு வீட்டிற்குள் வா என்று மனுதாரரை குழந்தையுடன் வீட்டை விட்டு விரட்டி விட்டார். அதனால் மனுதாரரது பெற்றோர்கள் மனுதாரரை பார்க்க வந்தபோது அவர்களை அசிங்கமான வார்த்தையால் பேசி கொலை செய்து விடுவதாக மிரட்டியுள்ளார். அக்கம் பக்கத்தினர் காவல் நிலையத்திற்கு மேற்படி சம்பவத்தை தெரிவித்தபோது காவல் அதிகாரிகள் வந்து எதிர்மனுதாரரை சத்தமிட்டு சென்றார்கள்.

எதிர்மனுதாரரும் அவரது குடும்பத்தினரும் எப்பொழுதும் மனுதாரரது தாழ்த்தப்பட்ட சாதி பெயரை சொல்லி திட்டிக்கொண்டே இருப்பார்கள். குடும்ப நலனை கருதி அதை பொறுத்துக்கொண்டு அமைதியாக வாழ்ந்து வந்தார். எதிர்மனுதாரரின் தாயார் நீயோ கீழ் ஜாதிக்காரி உனக்கு எதுக்கு நகை என்று கேட்டு மனுதாரர் போட்டிருந்த நகையை வாங்கி கொண்டார். எதிர்மனுதாரர் வேறு ஒரு பெண்ணிடம் தவறாக பேசியதை அவரது செல்போனில் பதிவு செய்திருந்தார். அதைப்பார்த்த மனுதாரர் யாரென்று கேட்டதற்கு அப்படித்தான் பேசுவேன் என்றும், அவரது ஜாதியில் இது சாதாரணம் என்று கூறி அடித்து உதைத்துள்ளார். கடந்த 15.10.2021-ஆம் தேதியன்று எதிர்மனுதாரர் அதிகப்படியாக குடித்து, மது பாட்டிலை வீட்டிற்கு வாங்கி வந்து மனுதாரரின் பச்சிளம் குழந்தைக்கு ஒரு மூடியில் ஊற்றி வாயில் கொடுத்துள்ளதை பார்த்து ஏனென்று கேட்ட மனுதாரரின் வாயிலும் பாட்டிலோடு ஊற்றி குடி குடி என்று

கட்டாயப்படுத்தியுள்ளார். மனுதாரர் குடிக்க மறுத்ததால் அடித்து உதைத்து வீட்டை விட்டு விரட்டி விட்டார்.

கடந்த 16.10.2021-ஆம் தேதியன்று எதிர்மனுதாரர் அதிகப்படியாக குடித்து விட்டு மனுதாரரின் பெற்றோர் வீட்டிற்கு வந்து அசிங்கமான வார்த்தையால் திட்டியதால் மனுதாரரின் தந்தை நாகூர்முத்து எதற்கு இப்படி பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு, நீ இருப்பதால் தான் என் பொண்டாட்டி இங்கு வந்து விடுகிறாள் உன்னை கொன்று விட்டால் அவளுக்கு வேறு யாரும் கிடையாது என்று கூறி வீட்டிற்குள் சென்று அங்கிருந்த அருவாமனையை எடுத்து கொலை செய்யும் நோக்கில் மனுதாரரின் தந்தையை தாக்கியுள்ளார். அவர் உயிருக்கு பயந்து கையை வைத்து தடுத்ததில் அவரது இரண்டு உள்ளங்கையில் பலத்த வெட்டு காயங்கள் ஏற்பட்டது. அப்போது அங்கிருந்தவர்கள் கத்தியதனால் கையில் அருவாமனையை வைத்துக்கொண்டு இவன் இப்போ தப்பித்து விட்டான், நான் ஜெயிலுக்கு போயிட்டு வந்து இவனை சத்தியமாக கொன்று விடுவேன் என்று மிரட்டியுள்ளார். மேற்படி சம்பவத்தில் ஏற்பட்ட காயத்திற்கு மனுதாரரின் தந்தை விருதுநகர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். மேற்படி சம்பவம் தொடர்பாக மனுதாரர் கொடுத்த தகவலின் பேரில் விருதுநகர், ஊரக காவல் நிலையத்தில் வழக்கு (184/2021) பதிவு செய்து சிறையில் அடைக்கப்பட்டார். மனுதாரர், எதிர்மனுதாரருடன் வாழ்ந்து வந்த ஒவ்வொரு நாளும் நரகத்தில் வாழ்ந்ததாகவே கருதுகிறார். மேற்படி சம்பவம் நடைபெற்ற ஒரு மாதம் கழித்து மனுதாரரின் தந்தை இறந்து விட்டார்.

எதிர்மனுதாரர் கார் வாங்கி விற்கும் வேலை மற்றும் நிலம் வாங்கி விற்கும் வேலை

செய்து வருகிறார். அதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.50,000/-க்கும் மேல் வருமானம் பெற்று வருகிறார். அவர் சம்பாதிக்கும் பணத்தை எல்லாம் சுகபோக மற்றும் ஆடம்பர வாழ்க்கைக்கு செலவு செய்து வருகிறார். மனுதாரருக்கோ, அவரது மகனுக்கோ எவ்வித செலவும் செய்வது கிடையாது.

மனுதாரருக்கும், அவரது மகனுக்கும் செய்ய வேண்டிய உதவிகளை மனுதாரரது பெற்றோர்களிடமிருந்து பெற்று மிகுந்த கஷ்ட ஜீவனத்திற்கிடையே மனுதாரரும், அவரது மகனும் வாழ்ந்து வருகிறார்கள். மனுதாரரின் மகனுக்கு 2½ வயது ஆவதால் மனுதாரரால் எந்த வேலைக்கும் செல்ல இயலவில்லை. எதிர்மனுதாரர், மனுதாரரையும் அவரது மகனையும் பராமரிக்கும் கடமையிருந்தும் எந்தவித நியாயமான காரணமுமின்றி வேண்டுமென்றே புறக்கணித்து பலவகையில் கொடுமை செய்து வருகிறார். அதனால் தான் மனுதாரரும், அவரது குழந்தையும் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ முடியாத நிலையில் உள்ளனர்.

எதிர்மனுதாரர் நல்ல திடமான ஆரோக்கியத்துடனும், நல்ல வருமானமும் பெற்று வருகிறார். மனுதாரரை அன்றாடம் பராமரிக்க வேண்டிய கடமை எதிர்மனுதாரருக்கு சட்டப்படி உள்ளது. மனுதாரர் மற்றும் அவரது மகனுக்கும் உணவு, உடை, இருப்பிடம் மற்றும் மருத்துவ செலவு உள்ளிட்ட அத்தியாவசிய செலவினங்களுக்கும், மாதம் ஒன்றுக்கு ரூ.20,000/-த்தை கொடுப்பதினால் எதிர்மனுதாரருக்கு எந்தவித கஷ்டமும் ஏற்படபோவதில்லை. எனவே, மனுதாரருக்கு அசல் மனு முடியும் வரை ஜீவனாம்சமாக எதிர்மனுதாரர் மாதம் ஒன்றுக்கு ரூ.20,000/-த்தை வழங்கக்கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** எதிர்மனுதாரர் இவ்வழக்கில் வழக்கறிஞர் மூலம் ஆஜராகியிருந்த போதிலும், எதிருரை தாக்கல் செய்யாததாலும், அழைத்தும் ஆஜரின்மையாலும் ஒருதரப்பாக்கப்பட்டார். மனுதாரர் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப் படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**4.** மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

**5.** தற்போது மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரமானது மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதா என்பதே இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை.

**6.** அசல் மனுவானது விவாகரத்து கோரி இந்த மனுவின் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 17.04.2019-ஆம் தேதியன்று திருப்பரங்குன்றம் ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோவிலில் வைத்து திருமணம் நடைபெற்றதாகவும், மேற்படி திருமண வாழ்க்கையின் பயனாக 25.12.2020-ஆம் தேதி ஸ்ரீஹரிஹரன் என்ற ஆண் குழந்தை பிறந்துள்ளதாகவும், எதிர்மனுதாரர் கார் மற்றும் நிலம் வாங்கி விற்கும் வேலை செய்து அதன் மூலமாக மாதம் ரூ.50,000/-க்கும் மேல் வருமானம் பெற்று வருவதாகவும், அவர் சம்பாதிக்கும் பணத்தை எல்லாம் சுகபோக மற்றும் ஆடம்பர வாழ்க்கைக்கு செலவு செய்து வருவதாகவும், எதிர்மனுதாரருக்கு, மனுதாரரையும், அவரது குழந்தையையும் பராமரிக்கும் கடமை இருந்தும் எந்தவித நியாயமான காரணமும் இன்றி மனுதாரரையும், குழந்தையையும் புறக்கணித்து வாழ்ந்து வருவதாகவும், அதனால் மனுதாரரும், அவரது குழந்தையும் கஷ்ட ஜீவனத்தில் இருந்து வருவதாகவும், எனவே, எதிர்மனுதாரர் இடைக்கால ஜீவனாம்சத்தொகை கொடுக்க

கடமைப்பட்டவர் என்றும் கூறியுள்ளார்.

**7.** இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையே இந்த மனுதாரருக்கு இடைக்கால ஜீவனாம்சம் வழங்க வேண்டுமா, இல்லையா என்பதேயாகும். மேலும், மேற்படி மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சொத்து மற்றும் பொறுப்பு பற்றிய அபிடவிட்டில் எதிர்மனுதாரர் ஐ.டி.ஐ. மோட்டார் மெக்கானிக் படித்துள்ளதாகவும், நில புரோக்கர் மற்றும் கார் வியாபாரத்தின் மூலம் மாதம் ரூ.50,000/- வருமானம் பெற்று வருவதாகவும், சொந்த வீட்டில் வசித்து வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரரும் அவரது எதிர்உரையில் மோட்டார் மெக்கானிக் பிரிவில் ஐ.டி.ஐ. படித்துள்ளதாகவும் ஒப்புக்கொண்டுள்ளார். மேலும், மனுதாரரும் அவரது மனுவில் எதிர்மனுதாரர் கார் மற்றும் நிலம் வாங்கி விற்கும் வேலை செய்வதன் மூலமாக மாதம் ஒன்றுக்கு ரூ.50,000/-க்கும் மேல் வருமானம் பெற்று வருவதாக கூறியுள்ளதையும் வைத்து பார்க்கும்போது, எதிர்மனுதாரருக்கு ஜீவனாம்சம் கொடுப்பதற்கு போதுமான வசதியும், வருமானமும், திறமையும், வாய்ப்புக்களும் உள்ளது என்பது தெரிய வருகிறது. இந்த மனுதாரர் 2½ வயது குழந்தையை வைத்துக் கொண்டு வேலைக்கு எங்கும் செல்ல முடியாமல் மிகுந்த கஷ்ட ஜீவனத்திற்கிடையே மனுதாரரும் அவரது மகனும் வாழ்ந்து வருவதாக கூறியுள்ளதையும் வைத்து பார்க்கும்போது, இந்த மனுதாரருக்கும், அவரது குழந்தைக்கும் இந்த எதிர்மனுதாரர் இடைக்கால ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மனுதாரருக்கு கணவன் என்ற முறையிலும், குழந்தைக்கு தகப்பன் என்ற முறையிலும் எதிர்மனுதாரர் ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவராவர் என்றும், மனுதாரருக்கு மாதம் ரூ.7,000/-த்தை இம்மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து அசல் மனு முடியும் வரை ஒவ்வொரு ஆங்கில மாதமும் 05-ஆம்

தேதிக்குள் இடைக்கால ஜீவனாம்சமாக கொடுக்க வேண்டும் என்றும், அவரது மைனர் குழந்தைக்கு ரூ.3,000/-த்தை இடைக்கால ஜீவனாம்சமாக இம்மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து அவர் உரிய வயதை அடையும் வரை அல்லது அசல் மனு முடியும் வரை ஒவ்வொரு ஆங்கில மாதமும் 05-ஆம் தேதிக்குள் கொடுக்க வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, இந்த மனுவை பகுதியாக அனுமதித்து மனுதாரருக்கு, எதிர்மனுதாரர் மாதம் ரூ.7,000/-த்தை இம்மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து அசல் மனு முடியும் வரை ஒவ்வொரு ஆங்கில மாதமும் 05-ஆம் தேதிக்குள் இடைக்கால ஜீவனாம்சமாக கொடுக்க வேண்டும் என்றும், அவரது மைனர் குழந்தைக்கு மாதம் ரூ.3,000/-த்தை இடைக்கால ஜீவனாம்சமாக இம்மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து அவர் உரிய வயதை அடையும் வரை அல்லது அசல் மனு முடியும் வரை இதில் எது முன்னதோ அதன்படி ஒவ்வொரு ஆங்கில மாதமும் 05-ஆம் தேதிக்குள் கொடுக்க வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 14-ஆம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R V RAJA KUMAR Digitally signed by R V RAJA KUMAR

சார்பு நீதிபதி,

விருதுநகர்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** :-

இல்லை.

R V RAJA KUMAR Digitally signed by R V RAJA KUMAR

சார்பு நீதிபதி,

விருதுநகர்.

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.

இ.ம.எண்.2/2023 இன்

இ.தி.மு.ம.எண்.205/2021

உத்தரவு நாள். 14.02.2025